## கேள்வி:

# “வேதாகமம் மட்டுமே மத ரீதியாக நம்மேல் அதிகாரமுடையது என்றால், மனிதர்கள் வேதாகமத்திற்கு வித்தியாசமான விளக்கங்கள் கொடுப்பது ஏன்?”

## பதில்:

*“உண்மையான மார்க்கம் வேதவசனங்களின்மேல் நிறுவப்பட்டதாயுள்ளது” என்பது மறுமலர்ச்சி இயக்கத்தின் மாபெரும் கொள்கைகளில் ஒன்றாகும். மேலும், “வேதாகமத்தில் கற்பிக்கப்பட்டால் அன்றி எந்த ஒரு உபதேசமும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை”[1] என்பதும் உண்டு!*

*எல்லா சபைகளுமே ஒரே வழிகாட்டுதலைப் பின்பற்றுவதாகக் கூறுகின்றன. ஆனால், இப்படியுள்ள நூற்றுக்கணக்கான சபைகள் வித்தியாசமான போதனைகளைக் கொண்டுள்ளனவே!*

*என்னதான் தவறு? வேதாகமம் மட்டுமே மத ரீதியாக நம்மேல் அதிகாரமுடையது என்றால், ஜனங்கள் ஏன் அதற்கு வித்தியாசமான விளக்கங்கள் தருகின்றனர்? ஒரே வேதாகமத்திலிருந்து நூற்றுக்கணக்கில் வித்தியாசமான சபைகள் எழும்பும்போது, தொடர்பு கொள்ளுவதில் ஒரு பிரச்சனை ஏற்படுவது தெளிவாகிறது. இது ஒரு படைத் தலைவன் தனது படைகளுக்குக் கட்டளை பிறப்பித்தல் போன்றதாகும். அவர்கள் அவரது கட்டளையைப் படித்து விட்டு, உடனடியாக நூற்றுக்கணக்கான பிரிவுகளாகப் பிரிந்து கொண்டு எதிரியுடன் அல்ல, ஆனால் தங்களுக்குள்ளாகவே சண்டையிட்டுக் கொள்கின்றனர்! இது போன்றே, தேவன் தம் வசனத்தை நமக்குத் தருகிறார், அந்த வசனத்தைக் கற்ற பின்பு, நாம் யுத்தம் செய்யும்*

*நூற்றுக்கணக்கான குழுக்களாகப் பிரிந்து கொண்டு, எதிரியை அல்ல, ஆனால் நம்மில் ஒருவருக்கொருவர் யுத்தம் பண்ணிக் கொள்ளுகிறோம்! எங்கோ, ஏதோ தவறுள்ளது!*

*தவறு என்ன? நாம் பதில் தர விரும்பும் கேள்வி இதுவே ஆகும்.*

## இது யாருடைய தவறு?

*முதலில், நம்மை நாமே கேட்டுக் கொள்வோம், இது யாருடைய தவறு?*

*தொடர்பு கொள்ளும் முறை ஒவ்வொன்றிலும் மூன்று பகுதிகள் பங்கேற்கின்றன: ஒரு மூல ஆதாரம், செய்தி மற்றும் கேட்பவர். நீங்கள் உங்கள் நண்பருக்குக் கடிதம் எழுதினால், நீங்கள் மூல ஆதாரம், கடிதம் செய்தி, உங்கள் நண்பர் கேட்பவர் ஆவார். பேசக் கூடிய எந்த சூழலிலும், பேசுபவர் (மூல ஆதாரம்), பேச்சு (செய்தி), கூட்டத்தினர் (கேட்பவர்), என்ற மூன்றும் இருக்க வேண்டும். வேதாகமத்தின் விஷயத்திலும் இம்மூன்று கூறுகள் இருப்பது சாத்தியமேயாகும். 2 தீமோ. 3:16, 17ஐக் கவனியுங்கள்: ''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ள வனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.'' வேதவசனம் அல்லது வேதாகமம் (செய்தி) தேவனால் (மூல ஆதாரம்) மனுஷர்களுக்கு (கேட்பவர்கள்) தரப்பட்டுள்ளது. இவ்வாறாக, தேவனுக்கும் மனிதனுக்குமுள்ள செய்தித் தொடர்பில் ஏதேனும் தடங்கல் இருப்பினும் அது பின்வரும் மூன்று பகுதிகளில் ஒன்றிலேயே இருக்க வேண்டும்: அது தேவனின் தவறாகவோ அல்லது செய்தியின் தவறாகவோ அல்லது மனித குலத்தின் தவறாகவோ இருக்க வேண்டும். தவறு எங்குள்ளது?*

**தேவனின் தவறா?**

*தேவனுடைய புத்தகத்தை நாம் ஒரே விதமாகப் புரிந்து கொள்ள முடியாமல், அதன் விளைவாக வித்தியாசப்பட்ட சபைகளாகப் பிரிந்து நிற்பது தேவனுடைய தவறா?*

*தேவன் ஜனங்களிடத்தில் புதிராகப் பேசினாரா? விக்கிர காராதனைக்குரிய தெய்வங்கள் பேசுவதை (உண்மையில் அவைகள் பேசுவதாயிருந்தால்!) அதிக சிரமத்தின் பேரிலேயே*

*புரிந்து கொள்ள முடிவதாகக் கருதப்பட்டது. சில வேளைகளில் அவைகளின் செய்தியின்மேல் மனுஷர்கள் கொண்ட விசுவாசம் அவர்களை அழிவுக்குக் கூட இட்டுச் சென்றது.*

*நமது தேவன் அப்படிப்பட்டவரா? அவர் நம்மை இரட்சிப்பது போல நம்பிக்கையூட்டும் ஒரு செய்தியைக் கொடுத்து அதன் மூலமாகவே நம்மை அழிக்கிறவரா? வேதாகமம் ஒரு புதிராகவோ அல்லது புதிர்களின் தொகுதி யாகவோ உள்ளதா? இல்லை! ஒரு மனிதர் இப்படி எழுதுகிறார்!*

> *சில ஜனங்கள் நினைத்துக் கொண்டிருப்பதுபோல மனித குலத்திற்கு தேவன் இந்த வேதாகமத்தைப் புரியாத புதிராக அளிக்கவில்லை. அவர்கள் ஊடுருவி, ஆராய்ச்சி செய்து, பரி சோதித்து யூகிக்கின்றனர்; அவர்கள் "இந்த திறவுகோலையும்" "அந்த திறவுகோலையும்" முயற்சி செய்கின்றனர்; அவர்கள் எண்களைக் கூட்டி, எண்களை வகுத்து, எண்களை பெருக்கி, எண்களைக் கழித்துப் பார்க்கின்றனர். நிறைவாக, அவர்கள் படித்த வேதவசனப் பகுதிக்கு மிகக்கவர்ச்சியாக ஒரு "விளக்கம்" தருகின்றனர். ...*
>
> *வேதாகமம் ஒரு விடுகதையல்ல, அது ஒரு புதிரும் அல்ல; அது எதிர்பாராத, மறைவான அர்த்தங்கள் நிறைந்ததும் அல்ல; அது ஒரு குறுக்கெழுத்துப் புதிரும் அல்ல.*[2]

*தேவன் நீதியுள்ளவராயும், நாம் வேதாகமத்தைப் புரிந்து கொள்ளும்படி எதிர்பார்ப்பவராயும் இருப்பதால் அவர் நம்மிடம் புதிர்களின் வழியே பேசுவதில்லை. இரட்சிக்கப் படுவதற்கு நாம் சத்தியத்தை அறிய வேண்டும் (யோவா. 8:32). நாம் அந்த வசனத்தின்படியே நியாயந்தீர்க்கப்படுவோம் (யோவா. 12:48). வசனமே நம்மை நியாயந்தீர்க்கும் என்பதால், அதை விடுவிக்க முடியாத புதிர்களாக தேவன் பேசியிருப் பாரேயானால் அது ஒரு நியாயமற்ற செயலாயிருந்திருக்கும்.*

*மேலும், தேவன் அன்புள்ளவராயிருப்பதால் அவர் நம்மிடம் புதிராகப் பேசுவது இல்லை. தன்னையே காத்துக் கொள்ள முடியாமல் தண்ணீரில் மூழ்கும் ஒருவனைக் கற்பனை செய்து பாருங்கள். தரையில் இருக்கும் ஒருவர் அவனை நோக்கி, "நீ, நான் சொல்லும் புதிரை விடுவித்தால் உன்னைக் காப்பாற்றுவேன்" என்று சொன்னால் எப்படியிருக்கும்? நாம் இழந்து போகப்பட்ட நிலையில், உதவியற்று, நம்பிக்கை யற்றுள்ளோம்! நம்மை இரட்சிப்பதற்கு முன்பாக நாம் ஒரு*

புதிரை விடுவிக்க வேண்டும் என்று தேவன் நம்மிடம் கேட்பாரா? நமது தேவன் அப்படிப்பட்டவரல்ல.

வேறு வார்த்தைகளில் சொல்லுவதானால், தேவன் வேதாகமத்தின் மூலம் எந்தப் புதிர்களையும் கொடுத்து நம்மிடம் பேசவில்லை. ஏனென்றால் அவர் நீதியுள்ளவரா யிருக்கிறார்; அப்படிச் செய்வது அநீதியாகும், மேலும் அவர் அன்புள்ளவராயிருப்பதால், அப்படிச் செய்வது அவரைப் பொருத்தமட்டில் அன்பற்றதாகும்.

மேலும், அது தேவனுடைய தவறுதலாயிருக்கலாம். ஏனெனில் மனிதனின் புரிந்து கொள்ளும் தன்மைக்கு மேலாக அவர் பேசக்கூடும். அநேகமாக இது சரியானதாகக் காணப் படுகிறது. மெய்யாகவே தேவனுடைய எண்ணங்களும், வழிகளும் மனிதனுடைய எண்ணங்களைக் காட்டிலும் உயர்ந்தவையாயிருக்கிறது (ஏசா. 55:8, 9ஐப் பார்க்கவும்).

நமது புரிந்து கொள்ளுதலின் தன்மைக்கேற்ப தேவன் தமது எண்ணங்களைப் பொருந்தப் பண்ண முடியாது என்று கூறுவது தேவனை மதிக்கும் பாங்கல்ல. சில சமயங்களில் ஒரு பேச்சாளரைப் பற்றி நாம், “என்ன ஒரு அற்புதமான பேச்சாளர்! எவ்வளவு ஆழமாகப் பேசுகிறார்!'' என்று கூறுகிறோம். இவ்வாறு நாம் கூறுவதன் பொருள் என்னவென்றால்: “அவர் பேச்சு நன்றாகவே உள்ளது, ஆனால் அவர் என்ன சொன்னார் என்பதை நான் புரிந்து கொள்ள இயலவில்லை'' என்பதே யாகும். இப்படிச் சொல்லுவது அப்பேச்சாளருக்கு மதிப்பளிப் பதாகாது. ஜனங்கள் புரிந்து கொள்ளும் வகையில் பேச முடியாத பேச்சாளர், ஒரு நல்ல செய்தித் தொடர்பாளராக இருக்க முடியாது! இருப்பினும், சில பேச்சாளர்கள், மிகவும் சிக்கலான விஷயங்களை சராசரி மனிதர்களும் புரிந்து கொள்ளும் விதத்தில் பேச முடிகிறது. அவர்களைக் காட்டிலும் தேவன் குறைவான திறமையுள்ளவரா?

இதைப் பற்றிப் பின்வருமாறு சிந்தித்துப் பாருங்கள்: கடினமான விஷயத்தைக் கூட அறிவுத் திறம்மிக்கதாக்கு வதற்கு, ஒரு பேச்சாளர், பேசும் விஷயம், கேட்பவர்களின் தன்மை, மற்றும் எப்படிப் பேசுவது என்பதை அறிந்திருத்தல் அவசியமாகும். தேவன் நிச்சயமாகவே தமது செய்தியை அறிந்துள்ளார். அவர் தம்மைக் கேட்பவர்களையும் முழுமை யாக அறிந்துள்ளார், ஏனெனில் அவரே மனிதனை உருவாக் கினார். மேலும் எப்படிப் பேசுவது என்பதையும் அவர் அறிந்

*துள்ளார், ஏனெனில் செய்தித் தொடர்பின் விதிகளை வடிவமைத்தவர் அவரே. நிச்சயமாகவே மனிதனின் புரிந்து கொள்ளும் தன்மை மற்றும் தேவை ஆகியவைகளுக்கு ஏற்ற வகையில் தேவன் தமது எண்ணத்தைத் இசைவாக்க முடியும்.*

*மனிதன் புரிந்து கொள்ளும் வகையில் தேவன் பேச முடியாது என்று சொன்னால், தேவன் சிலவற்றைச் செய்ய விரும்பியும், அவரால் அதைச் செய்ய முடியாது என்றே நாம் சொல்பவர்களாயிருப்போம். மனிதனோடு செய்தித் தொடர்பு கொள்வது தேவனின் வல்லமைக்கு அப்பாற்பட்டதல்ல! நாம் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் தம்மை வெளிப்படுத்தச் சித்தமற்றவராகவோ அல்லது இயலாதவராகவோ தேவன் இருப்பதில்லை. அது தேவனின் தவறல்ல!*

**வேதாகமத்தின் தவறா?**

*இது வேதாகமத்தின் தவறா? வேதாகமம் நாம் புரிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ளதா?*

*தேவனுடைய சத்தியத்தை வெளிப்படுத்த மனித மொழி போதுமானதாய் இல்லையா? அப்படியென்றால், மனித மொழி போதுமானதாயிராத ஒரே விஷயம் மதம் மட்டுமே யாகும். எல்லாக் காலங்களிலும் எல்லா உண்மைகளும் - வரலாறு, விஞ்ஞானம், மின்னனுவியல் இன்னும் பல விஷயங்கள் பற்றிய உண்மைகளும் - மனித மொழியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மனிதன் சந்திரனுக்குச் செல்லுமளவு தேவையான செய்தித் தொடர்பை அளிக்க மனித மொழி போதுமானது என்றால், மனிதன் பரலோகத்திற்குச் செல்லும் பாதையைக் காட்ட ஏன் அது போதுமானதாயிராது?*

*தேவன் தமது சித்தத்தை மனிதர்களுக்கு வெளிப்படுத்தின போது, வார்த்தைகளையே பயன்படுத்தினார். பவுல், "அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி...." என்று கூறுகிறார் (1 கொரி. 2:13). ஆவியானவரின் வெளிப்பாடு வார்த்தைகளின் மூலமாகவே வந்தது. தேவனுடைய செய்தியை வெளிப்படுத்த, வார்த்தைகள் போதுமானதாய் இராதிருந்தால், தேவன் தாம் செய்வது இன்னதென்று அறியாதவராயிருப்பாரே. அவர் வார்த்தைகளைப் பயன்படுத்தினார் என்ற உண்மையே, வார்த்தைகள் போதுமானது என்பதை எனக்குக் கூறுவதாயிருக்கிறது.*

மனித மொழி புரிந்து கொள்வதற்கு இயலாத அளவு குழப்பமுடையதா? அப்படியிருந்தால், வேதாகமத்தின் ஏதாவது ஒரு பகுதி பல பொருள் தருவதாய் இருந்து, அது எதைக் குறிக்கிறது என்பதை ஒருவரும் அறியாத வகையில் இருப்பதாய்ப் பொருள் தருவதாகும். ஆனால் உண்மையில், இதைப்பற்றி மிகச் சிறிதளவே ஒப்புக் கொள்ளாமையுள்ளது. உதாரணமாக, இன்றைக்கு அமெரிக்காவின் ஜனாதிபதி யார்? எப்படி அதை அறிவீர்கள்? மனித மொழியில் உங்களுக்கு கிடைத்த செய்தித் தொடர்பின் மூலமே இதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? எனவே என்ன கூறப்பட்டது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு மனித மொழி எதுவும் நம்மைக் குழப்பக் கூடியது அல்ல.

உயிர்த்தெழுதல் போன்ற பல விஷயங்களைப் பற்றி வேதாகமமானது குழப்பமான நிலையில் இல்லை. இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார் என்பதை வேதாகமத்தின் மொழியிலிருந்து பல்வேறு வகையில் புரிந்து கொள்வதென்பது நடக்க வியலாத ஒரு செயலாகும்.

வேதாகமத்தை நாம் ஒரே மாதிரியாகப் புரிந்து கொள்வதில் உள்ள பிரச்சனையானது மொழிக் குழப்பத்தினால் ஏற்பட்டதல்ல மாறாக மற்ற நூல்களைக் கற்பது போலவே வேதாகமத்தையும் கல்லாததேயாகும். வரலாற்றைப் பற்றிய ஒரு நூலைக் குறித்து நாம் சொல்வதை கற்பனை செய்து பார்ப்போம்: "அமெரிக்க தேசத்தின் முதல் ஜனாதிபதியாக இருந்தவர் ஜார்ஜ் வாஷிங்டன் அல்லது அவர்கள் வேறு யாரையாவது சொல்லியிருக்கலாம் எனவே நான் எனது விருப்பத் தேர்வின்படி இதை எடுத்துக் கொள்வேன்." இவ்வித மாய் நாம் வரலாற்றைக் கற்பதில்லை, வேதாகமத்தையும் இவ்விதமாய் நாம் கற்கக் கூடாது. வார்த்தைகள் ஒரே வேளையில் எதிர் மறையான பொருட்களைக் கொண்டிருக்க முடியாது. வேதாகமத்தை நாம் நெருங்குகையில், மொழிக் குழப்பம் வந்து நம்மைத் தோல்வியுறச் செய்வதில்லை, மாறாக நமது நடக்கையே பிரச்சனையாக உள்ளது. எனவே வேதாகமத்தின்மேல் எத்தவறும் இல்லையென்றே நாம் முடிவு செய்கிறோம்.

**மனிதனின் தவறா?**

நாம் வேதாகமத்தை ஒரே மாதிரியாகப் புரிந்துகொள்ள முடியாமலிருப்பது மனிதனின் தவறா? வேதாகமத்திற்கு

வித்தியாசப்பட்ட விளக்கங்கள் உண்டானது வேதாகமத்தின் தவறாகவோ அல்லது தேவனின் தவறாகவோ இல்லாத பட்சத்தில் அது நிச்சயமாகவே மனிதனின் தவறாகவே இருக்க வேண்டும். மனிதர்கள் வேதவாக்கியங்களுக்கு தவறான விளக்கமளிக்கின்றனர். இதன் விளைவாக அவர்கள் வேதவாக்கியங்களை தவறாகப் புரிந்து கொள்கின்றனர். எனவே அவர்கள் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியத் தவறுகின்றனர்.

"மனிதர்கள் ஏன் வேதாகமத்தை ஒரே மாதிரியாகப் புரிந்து கொள்வதில்லை?" என்று ஜனங்கள் கேட்கின்றனர். "ஏனெனில் அவர்கள் வேதாகமத்தைப் புரிந்து கொள்வதில்லை, அவ்வளவு தான்" என்பது இதற்கு ஒரு பதிலாகும். அவர்கள் வேதாகமத்தைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம், ஆனால் தேவனுடைய நூலில் இருந்து மனிதர்கள் முரண்பட்ட அர்த்தங்களைப் பெறுவார்களானால், அவர்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை என்பதே உறுதியாகும்.

## மனிதர்கள் வேதாகமத்திற்கு ஏன் தவறான விளக்கம் தருகின்றனர்?

இது பலர் வேதாகமத்திற்கு ஏன் தவறான விளக்கம் தருகின்றனர்? என்ற கேள்விக்கு நம்மை இட்டுச் செல்கிறது. இதற்கு பல பதில்கள் இருப்பது சாத்தியமாகும்.

சிலர் வேதாகமத்தைக் கற்பதில்லை, அவர்களின் வேதாகமங்கள் அலமாரிகளில் தூசி படிந்து கிடக்கும். சிலர், "வேதாகமத்தை நான் அந்த வழியில் புரிந்து கொள்ளவில்லை" என்று கூறும்பொழுது, அவர்கள் அதை எப்போதுமே கல்லாமலிருப்பதால்தான் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். சார்லி பிரவுனின் கேலிச் சித்திரத்தில் வரும் பாத்திரங்கள் போல் சிலர் உள்ளனர். அவர்கள், "வெளிப்படுத்தின விசேஷத்தை நன்கு கற்ற சிலரைச் சந்திக்கும் வரையிலும், நான் என்னை அந்நூலில் தேர்ச்சியுடையவனாகவே எண்ணிக் கொண்டிருந்தேன்" என்கின்றனர். நீங்கள் சிறப்பான வகையில் முயற்சி செய்து வேதாகமத்தைக் கற்றுக் கொள்ளாத வரையில், வேதாகமத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும் என்று எதிர்பார்க்க முடியாது! (மத். 5:6; 2 தீமோ. 2:15; 1 பேது. 2:2).

சிலர் வேதாகமத்தை சத்தியம் என்று ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் வேதாகமத்தில் சத்தியம் இருக்கிறது என்று

*சொல்கின்றனர், ஆனால் வேதமே சத்தியம் என்று அவர்கள் விசுவாசிப்பதில்லை. அவர்கள், சத்தியம் தவறானவைகளோடு கலந்துள்ளது என்றும், உண்மைகள் கட்டுக்கதைகளோடு கலந்துள்ளது என்றும் நம்புகின்றனர். சில விஷயங்களில் வேதாகமம் நம்புவதற்குரியதல்ல என்று அவர்கள் எண்ணும் போது, எவ்விதம் அதற்குச் சரியான விளக்கம் தர அவர்களால் முடியும்? வேதத்தைப் புரிந்து கொள்ள, வேதவசனங்கள் பற்றி சரியான எண்ணம் கொண்டிருத்தல் தேவை: நீங்கள் வேதாகமத்தை தேவனுடைய வார்த்தை என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் (1 தெச. 2:13) மற்றும் அதை நீங்கள் நேசிக்க வேண்டும் (2 தெச. 2:8-11).*

*சிலருக்குப் பிழையிலேயே விசேஷித்த அக்கறை இருக்கிறது. "விசேஷித்த அக்கறை" என்பதை "மாற்றத்தின் போது இழந்துபோகிற ஏதாவதொன்றில் காட்டப்படுகிற ஒரு ஆர்வம்" என்று அகராதி விளக்கமளிக்கிறது. பிரஸ்பிட்டேரியன் சபையில் அபிஷேகம் பெற்றுக் கொண்டிருந்த சீரமைப்பு இயக்கத்தை சேர்ந்த ஒரு தலைவரிடம், ''பிலடெல்பியா விசுவாச அறிக்கையை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா'' என்று கேட்கப்பட்டது. தன்னுடைய விசுவாசத்திலேயே நிலைதடுமாறிக் கொண்டிருந்த அவர், ''நான் பார்க்கிற அளவுவரை அது வேதாகமத்தோடு ஒத்துப் போகிறது" என்று விடையளித்தார். சிலர் இதற்கு எதிர்மாறாகச் செய்கிறார்கள்: அவர்களுடைய கொள்கையோடு ஒத்துப் போகிற அளவுக்கு மாத்திரமே அவர்கள் வேதாகமத்தை ஏற்றுக் கொள்கிறார்கள்.*

*சத்தியத்தில் போதிக்கப்பட்ட ஜனங்கள் சில வேளைகளில் தங்கள் பிரசங்கியாரிடம் சென்று ''இது என்ன?'' என்று அவர்களிடம் கேட்கின்றனர். அவர்கள் கற்றுக் கொண்டிருந்த கருத்துக்களுடன் பிரசங்கியார் ஒத்துப் போகாதது பற்றி அவர்கள் வியப்படைகின்றனர். ஆனால் அவர்கள் ஏன் வியப்படைய வேண்டும்? ஒரு சபை போதிப்பதை நம்புவதில் அந்த சபையில் பிரசங்கிப்பவர் விசேஷித்த அக்கறை கொண்டிருப்பதில்லையா? அவரது வாழ்க்கையே அதைத்தான் சார்ந்திருக்கின்றது! வித்தியாசப்பட்ட போதனை சரியானதென்று சம்மதிக்க அவர் ஏன் விரும்ப வேண்டும்?*

*நாம் ஏற்கனவே நம்புகின்றது எதுவோ, அதில் நாம் எல்லாருமே விசேஷித்த ஆர்வம் காட்டுபவர்களாயிருக்கிறோம். உங்கள் நம்பிக்கையை மாற்றிக்கொண்டால், அது*

நீங்கள் சிலவற்றை இழக்கக் காரணமாகாதா? எனவே வேதாகமத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளத் தேவைப்படுவது என்ன? ஒரு நேர்மையான இருதயமேயாகும் (லூக். 8:15). உங்களுக்கு நேர்மையான இருதயம் இருந்தால், சத்தியத்தை அணைத்துக் கொள்வதற்காக எதை வேண்டுமானாலும் - எவ்வளவு பயனுள்ளதாகவோ, வசதியானதாகவோ அல்லது ஆறுதலானதாகவோ இருப்பினும் அவைகளை இழந்துவிடத் தயாராயிருப்பீர்கள்.

சிலர், பேதகமான சிந்தனையுடன் வேதாகமத்தை நோக்கு கின்றனர். இது அவர்கள் ஒரு வண்ணக் கண்ணாடியின் வழியே பார்ப்பதற்கு ஒப்பாய் உள்ளது. சிவப்புக் கண்ணாடியின் வழியே பார்த்தால் உலகம் முழுவதும் சிவப்பாகவே தெரியும், ஊதாக் கண்ணாடியின் வழியே பார்த்தால் உலக முழுவதும் ஊதா வண்ணமாகவே தெரியும். வேதாகமத்தைப் பொறுத்த மட்டில் ஜனங்கள் இப்படித்தான் உள்ளனர். அவர்கள் ஏற்கனவே கொண்டுள்ள நம்பிக்கைகளுக்கு உறுதிப்பாட்டைக் காண்பதற்காக வேதாகமத்திடம் செல்கின்றனர். வேதா கமத்தை அவர்கள் அந்த வழியில் அணுகும்போது, அவர்கள் காண விரும்புவதைக் கண்டடைகின்றார்கள்.

பேதக சிந்தனைகள்தான் கிறிஸ்துவின் உரிமைகோருதல் களைக் காணாதபடிக்கு யூதர்களைக் குருடாக்கினது. அவர்கள் முன் தீர்மானித்திருந்த மாதிரிக்கு அவர் ஒத்து வராததால், அவரைச் சிலுவையில் அறைந்தனர். "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்" என்று இயேசு கூறின மத். 16:18 வசனப் பகுதியைப் பற்றி நான் ஒருவரிடம் கலந்துரையாடி, அதன் மூலம் வேதாகமம் அகில உலகிற்கான ஒரு மூப்பரைக் குறிப்பிட வில்லை என்பதைப் போதிக்க முயன்றேன். அதற்கு அவர், ''ஆனால் எனது விசுவாசத்துடன் நான் அதைப் படிக்கும்போது, அதில் நான் அகில உலகத்திற்குமான ஒரு மூப்பரைக் காண்கின்றேனே" என்று பதில் அளித்தார்.

நம்மிடம் ஏற்கனவே உள்ள நம்பிக்கைகளோடு வேதாகமத் தைப் படிக்க நாம் முற்படும்போது, நாம் விரும்புகின்றவை களை மட்டுமே அதில் காணும் அபாயம் உள்ளது. நமக்குத் தேவைப் படுவது என்ன? ஒரு திறந்த மனம் - மற்றும் பெரோயா பட்டணத்தாரின் வழக்கம் ஆகும், அவர்கள் பவுல் போதித்தது சரியானதுதானா என்று காண வேத வசனங்களை ஆராய்ந்து பார்த்தார்கள் (அப். 17:11). வேதாகமத்தைச் சரியாக விளக்கம்

பண்ணுவதற்கு, வேதவசனங்களைப் பேதக சிந்தனையின்றி ஆராய்ந்து பாருங்கள், நீங்கள் போதிக்கப்பட்டிருப்பது சத்தியமா இல்லையா என்பதையும் கண்டுபிடிக்க இது உதவும்.

தங்கள் கருத்துக்களைப் புகுத்துவதற்காகச் சிலர் வேத வசனங்களைப் புரட்டுகின்றனர். பேதுரு, பவுலின் நிருபங் களில் உள்ள சில கருத்துக்களை, "கல்லாதவர்களும், உறுதி யில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறது போலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்" (2 பேது. 3:16) என்று கூறினார். ஒருவர் தமது கருத்திற்கேற்றவாறு வேதவசனங்களைப் புரட்டுவதென்றால்: "நான் சொல்ல விரும்புவதை அது சொல்லாவிட்டால், நான் அதை அவ்விதம் சொல்ல வைப்பேன்" என்பதாகும். 1 கொரி. 1:17ல் பவுல் கூறியதை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்: "ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை" என்றால் ஞானஸ்நானம் முக்கியமானதல்ல என்று இவர்கள் சொல்கின்றனர். ஆனால் புதிய ஏற்பாடு, ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

நாம் ஏற்கனவே கொண்டுள்ள நம்பிக்கைகளுக்கு மாறான வைகளை வேதாகமமானது நமக்குப் போதித்தால், வேத வசனங்களை நமது நம்பிக்கைக்கேற்றபடி வளைப்பதைக் காட்டிலும், வேதவசனத்திற்கு ஏற்றவாறு நமது நம்பிக்கைகளை மாற்றிக் கொள்வதே அவசியமாகும்.

வேதாகமத்தைக் கற்பதில் சிலர் தவறான முறைகளைப் பயன்படுத்துகின்றனர். சில ஜனங்கள் நல்ல மனமுள்ளவர் களாய், வேதாகமத்தை மதிப்பவர்களாய், பேதக சிந்தனையற்று இருக்கின்றனர். இருப்பினும், விளக்கம் அளிப்பதின் அடிப் படை விதிகளை ஒதுக்கித் தள்ளுவதன் மூலம் அவர்கள் தவறு செய்கின்றனர். அவ்விதிகள் கீழே தரப்பட்டுள்ளது:

1. சந்தர்ப்பத்தைக் கவனியுங்கள். யார் பேசுவது? யாருக்குப் பேசப்படுகிறது? எப்பொழுது? என்ன நோக்கத்திற்காகப் பேசப்படுகிறது? என்று கேளுங்கள்.

2. அவ்விஷயத்தைப் பற்றிய எல்லா உண்மைகளையும் பெறுங்கள்.

3. சிக்கலான பகுதிகளுக்கு, சுலபமான பகுதிகளே விளக்கம் அளிக்கட்டும்.

4. நேரடியான மற்றும் உருவகமான பேச்சுக்களுக்கிடையே வித்தியாசத்தைக் கண்டுணருங்கள்.

*5. "இவ்வசனம் எனக்கு எம்முறையில் நடைமுறைப் படுத்தப்படும்?" என்று கேளுங்கள்.*

*உதாரணமாக, கிறிஸ்துவின் மறுவருகை பற்றி போதிக்கையில், அவர் பூமியில் அப்பொழுது ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்தி அதில் ஆயிரம் வருடங்கள் அரசாளுவார் என்று போதிப்பதன் மூலம் இவ்விதியை மீறுகின்றனர். உருவகமான மற்றும் தெளிவற்ற வசனப் பகுதிகளைக் கொண்டு இவற்றை விளக்கப் படுத்தி, கிறிஸ்துவின் இராஜ்யமானது இவ்வுலகத்திற்குரியதல்ல (யோவா. 18:36) என்பது போன்ற தெளிவான வேத வசனப் பகுதிகளை இதற்குப் பயன்படுத்தாமல் விட்டு விடுகின்றனர்.*

*சத்தியத்தின் மேல் சிலர் போதிய அளவு அன்பு செலுத்தாமையே வேதாகமத்தின் இவ்விதமான தவறான விளக்கங்களுக்கு அடிப்படையாய் உள்ளது. 2 தெச. 2:10-12ஐக் கவனியுங்கள்.*

> *... கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாக கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்.*

*இது, (1) சிலர் ஆக்கினைக்குள்ளாவார்கள். (2) அவர்கள் பொய்யை விசுவாசிக்கிறதினால் ஆக்கினைக்குள்ளாவார்கள். (3) அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். (4) "சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமல் போனபடியால்" அந்தப் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாக அழிவுக்கான யூகத்திற்கு அவர்களை ஒப்புவிப்பார். சத்தியத்தின் மீதுள்ள அன்பு ஒரு மனிதரின் சிந்தனையைவிட்டு நீங்கும்போது அந்த வெற்றிடத்தை ஒரு பொய் வந்து நிரப்புகின்றது. இயேசு, "தேடுங்கள் கண்டடைவீர்கள்" என்று கூறினார் (மத். 7:7). சத்தியத்தை அறியும்படி நாம் ஊக்கத்துடன் தேடினால் நாம் அதைக் கண்டடைவோம்! ஜனங்கள் ஊக்கமாய்த் தேடுமளவுக்கு சத்தியத்தின்மேல் அன்பு செலுத்துவதில்லை என்பதே பிரச்சனை!*

# முடிவுரை

*மனிதர்கள் வேதாகமத்திற்கு வித்தியாசமான விளக்கங்கள் கொடுப்பது ஏன்? என்ற கேள்விக்கு இன்னும் பல காரணங்கள் இருந்தபோதிலும் மேற்கண்டவைகள் நமக்கு போதுமான தாயிருக்கும்.*

*இக்கருத்துக்களை நீங்கள் ஏற்றாலும் மறுத்தாலும், மக்கள் ஒத்துக் கொள்ளாமல் போவது, அது தேவனுடைய தவறோ அல்லது வேதாகமத்தின் தவறோ அல்ல என்பதை நிச்சயமாய் நீங்கள் ஏற்க வேண்டும். அது மனிதர்களாகிய நமது தவறுதான்! நாம் ஒன்றில் ஒத்துக் கொள்ளாமல் போகும்போது, நான் கூறுவது சரியில்லாமல் இருக்கலாம் மற்றும் நீங்கள் கூறுவது சரியில்லாமல் இருக்கலாம்! ஆனால் வேதாகமம் சரியானது! நாம் இருவருமே சத்தியத்தை தவற விட்டிருக்கலாம். ஆனால் சத்தியம் என்றும் உள்ளது. அது வேதாகமத்தில் காணப்பட முடியும்!*

*அநேகர் வேதாகமத்திற்குத் தவறாக விளக்கமளிப்பதால், எனது விளக்கம் சரியானதென்று நான் எப்படி நிச்சயிக்க முடியும்? தெளிவான வேத வசனப்பகுதிகளை விளக்கமளியுங் கள். உதாரணமாக, சுவிசேஷத்தில் உண்மைகளும், கட்டளை களும், மற்றும் வாக்குத்தத்தங்களும் உள்ளன. சுவிசேஷத் தினால் இரட்சிப்படைவதற்கு அடிப்படை உண்மைகளை விசுவாசியுங்கள், தெளிவான கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுங் கள், தெளிவான வாக்குத்தத்தங்களை நாடுங்கள்! நீங்கள் கிறிஸ்தவரல்லவென்றால், இயேசு தேவனுடைய குமாரன் என்று விசுவாசியுங்கள்; மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்ற தெளிவான கட்டளைக்குக் கீழ்ப்படியுங்கள் (அப். 2:38); அப்போது பரிசுத்த ஆவியின் வரம், பாவமன்னிப்பு மற்றும் நித்திய ஜீவனின் நம்பிக்கை என்ற வாக்குத்தத்தத்தைப் பெறுவீர்கள்! இது எளிமையானதல்லவா?*

*உங்கள் அறிவின்படி செயல்பட்டு கர்த்தர் உங்களைச் செய்யும்படி கூறுபவற்றை ஏன் செய்யக் கூடாது?*

---

**குறிப்புகள்**

[1]Jesse Lyman Hurlbut. *The story of the Christian Church.*

[2]Fanning Yatar Tant. "The Bible is not a Conundrum."